Koviloor Digital Library

5213 2627

உ

சிவமயம்.

குருவே துணை.

இராமநாதபுரம்ஜில்லா சிவகெங்கை சமஸ்தானம்
பெரிய ஓலைக்குடியில் வசிக்கும்
விஸ்வக்ஹ மலையாண்டி யாச்சாரியார் குமாரர்

இராமசாமி ஆச்சாரியவர்களால்

இயற்றிய

பிர்மானந்தங் கொடுக்கும்

பேரின்ப சாகரம்.

ஷை சமஸ்தானம் பட்டமங்கலம்
மகா-ள-ள-ஸ்ரீ வீர. சொ. ராம. காசிசெட்டியார்
என்று பேர்விளங்கிய ஸ்ரீமான்

இராமசாமி செட்டியாரவர்கள்

பொருளுதவியால்

(:)

மதுரை புதுமண்டபம் புஸ்தக வியாபாரம்,
இ. ராம. குருசாமிக்கோனார்
அவர்களது
மதுரை வடக்குமாசி வீதி
ஸ்ரீராமச்சந்திர விலாச அச்சியந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

விலை] 1922. [அணா ¼

Koviloor Digital Library

Koviloor Digital Library

52/3

உ

சிவமயம்.

குருவே துணை.

பிர்மானந்தங் கொடுக்கும்

பேரின்ப சாகரம்.

ஆசிரிய விருத்தம்.

ஆதியரியேனுலக நீதிதெரியேன்சிரிய
அறிவினன்சொல்லுமொழியை
அன்புடன்கொண்டருள யின்பமுளஞானிக
ளருட்ப்பெருவதாகவந்த
சாதிமனுமயகுல துவஸ்ட்ட சில்ப்பவிஸ்வ
சந்ததியிலவதரித்த
தந்தைமலையாண்டிதன் மைந்தனென்சொந்தமாய்
சாற்றிடு மிராமசாமி
மீதினிற்கிருபைபுரி வாயென்றுயானும்
விளம்புவேன்மன துளம்பி
மீளாதபடுநரகில் வீழ்காமல்மீட்டிடும்
வித்தகாயென்னுள்நின்று
பாதிமதிசூடிடும் பரமனே அடியவர்கள்
பங்கனென்பங்கில் நிர்ப்பாய்
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமான பொருளே (1)

அண்டபகிரண்டமும் அடங்கலுமுந்தனுட
அம்ஸமல்லாதுவேறு
அறிகிலேன்சிறுவன்யான் வெறியனைப்போலவும்
அலறினேனுன்னைவேண்டி
சண்டனுடவாதனைக ளில்லையென்றெண்ணவுந்
தயவுவைத்தாழ்வையென்று
சாமினானுந்தனைப் போற்றினேன்போற்றினோர்
சஞ்சலப் படுவதுண்டோ
தொண்டுசெய்தொண்டர்க்ளக் கானந்தமானபர
சுத்தசைதன்யவடிவே
சுருதிமுதலாகம புராணகலைவேதமுஞ்
சொல்லுதற்கரியமுடிவே
பண்டுகுறைசெய்யினும் பின்னுலகுறைசெய்யினும்
பாதுகார்த்தெனையாளுவாய்
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபொருளே (2)

தந்தைநீதாயுநீ தமர்தாரமற்றுஞ்
சமஸ்த்தமும்நீயென்றுநான்
தஞ்சமெனநாடினே னஞ்சலிசெய்துனதடிமை
தன்மைநீ அரியாததோ
வந்தநாள்முற்றிலும் பந்தவினையகலாத
மடமைகுடியாளனுக்கு
மனதுண்மைகாட்டியென் ஜெனனவினைமீட்டிஉன்
மகிமைதந்தாள்வதற்கு
சொந்தகுலதெய்வநீ யல்லாதுவேறுயான்
சொல்லவும்வாயுமுளதோ
தோளனேயேளைபங் காளனேயென்றநற்
சொற்க்கண்டுநின்றகுருவே
பந்தபாசங்களை அறுத்துயிடேரஉன்
பட்சம்வைத்தெனையாளுவாய்
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபொருளே (3)

Koviloor Digital Library

52/2

நீர்க்குமிழியல்லவோ தேகமென்றெண்ணுமா
　　நேசர்களனந்தருண்டு
நீடூழிகாலம்வரை நாமிருப்போமென்ற
　　நிர்மூடரோவனந்தம்
சேற்றிலேவீழ்ந்துளன் றலைகின்றகாமிகள்
　　தேசத்திலென்சொல்லுவேன்
ஜெகமெலாநாம்கட்டி ஆளுவோமென்றதற்
　　சேகரர்கள்மிச்சமையோ
நாற்றிசையுமிவ்விதம் நீசெய்தஉலகமதில்
　　நானுமொருபங்காளியாய்
நாறியர்களாசைகொண் டேறும்வகைதெரியாமல்
　　நைவனேயின்னமிந்தப்
பாற்குள்நின் றலையாத பாதைசொலுவாயுனது
　　பக்தன் மேல்ச்சித்தம்வைத்து
பாரபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
　　பரமசிவமானபொருளே (4)

துலையாதபாசவினை தன்னைவிட்டுன்வழி
　　துறந்தோரிடஞ்சென்றுயென்
துன்பமதைநீக்கிநல் லின்பமதுகெண்டிடுஞ்
　　சூட்சமறியாமலின்னம்
அலைவதேயன்றிமற் றூர்வேலைசெய்கிறேன்
　　அய்யனேமெய்யில்லையோ
ஆனாலும்நான்கொடிய பாதகன்பாதகன்
　　அறிவிலாப்பேதையேற்கு
சலியாமலென்னைவந் தாளென்றுசற்றே
　　யிரங்குவேனுன்மயக்கம்
தைரியமாயிந்த உலகமதிலுன்பெருமை
　　சாற்றுவேன்சிற்றறிவினால்
பலகாலுமுனைநினை யாதபாவிக்குப்
　　பகர்ந்திடுவதெந்தனாளோ
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
　　பரமசிவமானபொருளே (5

Koviloor Digital Library

பொசிக்கவுந்தூங்கவுங் காமமீறியபோது
போகந்தனைத்தேடவும்
புல்லரிடநாடவும் வல்லமைகள்பேசவும்
போராண்மைபேசிலொன்றை
நசித்துவிடுவோமென்ற ஆணவம்தேடவும்
நல்லறிவிலாதியிந்த
நாற்றச்சரீரமது செய்கின்றகொடுமைகளை
நான்சொல்லநீதியுண்டோ
ருசிக்காதயிவ்வுலக வினையேருசிக்குதே
ருசியாதிருக்கயெனது
ஸ்தூலமதுசெய்வதோ நீசெய்வதோவென்று
தோணுமலேசர்நிலைமையும்
பசித்தவன்போலவே அலறினேனென்முகம்
பார்த்தருளவேணுமையா
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமான பொருளே (6)

உயர்குலந்தன்னில்வந் துற்றதினாலென்ன
உருவமதனைப்போலவும்
ஒளிவாயிருந்தென்ன சலியாமல்வித்தைகள்
ஒன்றுநூர்கற்றுமென்ன
தயவாகயின்சொலும் ஆழிசூழ்வறையில்நின்
றனக்குநிகரில்லையென்ன
சகலகலைஞ்ஞான னாயினுமுலகிற்
தனமொன்றிலாதிருந்தால்
நயமாகயீன்றமா தாவும்மயங்குவள்தன்
னங்கைமரியாதைசெய்யாள
நாட்டில்மற்றனைவரும் இகழ்வதொன்றல்லாது
நாடியேகிருபைபுரியார்
பயனடையாதயிவ் வுரவையான்விட்டுனது
பட்சமரவாததெப்போ
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபொருளே (7)

Koviloor Digital Library

ஓடியும்தேடியும் வாடியும்பயனமக்
குள்ளபடியாகுதென்று
ஓரறிவிலாமலே நாரியர்களாசைகொண்
டுளமதைவிளக்கிடாமல்
பேடிபோலலைகின்ற தாடியைவளர்த்துதற்
பேயரோமிகவனந்தம்
பேசவரியார்நல்ல தாசர்களெனப்பெயர்கள்
பெற்றவர்கள்கோடிஉன்னை
நாடியேதீர்த்தங்க ளாடியேபூசைகள்
ணடத்துபவரென்சொல்லுவேன்
நாளையோஅகமெந்த வேளையோவென்றுதன்
ஞாயமறியாமலின்னும்
பாடித்துதித்துநான் பயனடைவதெப்படிப்
பட்சம்வைத்தெனையாளுவாய்
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபொருளே (8)

இரும்புங்கறைந்திடும் யென்மனங்கறையாம
லேங்குவதையென்சொல்லுவேன்
யீசனேயென்னகத் தீசனேஉனதுசெய
லில்லாதுயெதுவுமுண்டோ
கரும்பாயிலுஞ்சற்று கைக்குமேநின்மகிமை
கைக்காதுயென்றசொல்லை
கண்டெனதுபிண்டமதி லுள்ளவைம்பூதங்
கலங்குவதுமரியாததோ
அரும்பொன்றரூபமொன் றல்லாதுஅவ்வா
சனைக்குநிகரூபமுண்டோ
ஆதுபோலரியாத மூடர்சொற்கேட்டுமே
அண்டிலையிளந்தபேடாய்
பரந்தனேயல்லாது கண்டுகொண்டானந்த
பரவசமூழ்கவிலையே
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபொருளே (9)

Koviloor Digital Library

இச்சைவைத்தெங்களை ரெட்சிக்கவேணு
மென்றெண்ணுகிரமாந்தர்முறையை
பேதென்றுசொல்லுவேன் யீதென்றுஆதென்
றிரும்புகல்செம்புமண்ணை .
அச்சமாய்ப்பூசிக்கு மார்க்கமரியாமல்யா
னலைவதேஇழிவாகுமோ
ஆராய்ந்துபார்த்திடில் ஆச்சரியமாகுதே
ஆதலாலெப்படியினும்
லெட்சியம்வைப்பவற் கல்லாதுமற்றபடி
நேராதகருணைவடிவே
நேசமாயுள்ளவ ரிடத்தினிலமர்ந்திடும்
நிலையானபிர்மமேயென்
பட்சம்நீயாகினால் யான்படும்துன்பவினை
பஞ்சுபோலாவதரிதோ
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபொருளே (10)

வாராதையென்னிலேன் வருவதற்கஞ்சேன்
மலைக்கிலேகொதுவென்னிலும்
மானிலந்தன்னில்வன் னெஞ்சர்களுரைக்கின்ற
வசையையோபொருக்கமுடியேன்
சேராமல்னுமிருப் போமென்றுயெண்ணுவேன்
செய்தவினைதன்னில்வந்த
சேயிளையுமக்களுந் தாய்தந்தைசுற்றமுஞ்
சிரிடாவனையுன்னுவேன்
போராதஅறிவினாற் செய்தபிளையிதுவென்று
போதனைகளென்சொல்லினும்
பொங்குதேயென்மனம் பெங்குமிடமில்லையே
புகழெனக்கேதாகிலும்
பாராமல்நீயிருந் தாலெனதுஉயிரினில்ப்
பட்சம்வைத்திடுவதாரு
பராபரித்தெங்கும் நிராதாரமாய்நின்ற
பரமசிவமானபெருளே (11)

Koviloor Digital Library

இரவிவிலேகாணலாம்யெழுகடலுமூடாடி
யீரேழுபுவனமுழுதும்
யேகசக்கராதிபதியாகவுமிருக்கலாம்
இந்திரலோகத்தேவரை
வருகவுஞ்செய்யலாந்தன்னையுமறைக்கலாம்
மற்றொருவருட்செல்லலாம்
மாந்தீரீகவேலையால்துஷ்ட்டரணபேய்களை
வணக்கியேயேவல்கொளலாம்
சுருசுருப்பாகவேநவலோகவேதையைச்
சொர்ணம்விளையச்செய்யலாம்
தூலசூக்கும மறியலாம்தன துகினைவினிற்
தோன்றியதெலாஞ்செய்யலாம்
சரியாகஓர்மனங்குறிகண்டிருப்பது
தானரிதுயென்னையாளவா
சந்ததமுயெந்தனுட சிந்தைதனில்நின்றகுரு
சங்கராஉனதுதுணையே (12)

தீதுநலமரியாதசேயனைப்பெற்றவள்
செல்லடாவென்றுசொலவுந்
தீரமோதனதுடற்பாரமென்றெண்ணுகிற
செய்கைநீயரியாததென்ன
ஞேதினுலென்னுக்காதாரமானவரிவ்
வுலகமதில்வேரேஉண்டென்
றொப்பவும்யென்மனஞ்செப்பவும்வாயனே
உள்ளபடியாகுதென்று
நீதியாய்நாமிருப்போமென்றுயெண்ணுவேன்
நெஞ்சம்பதைத்துஒன்றை
நேரவும்மாதரைச்சேரவும்பற்பல
நினைவுவந்தூடாடவும்
சாதிப்பதேயன்றிஉன்மகிமைகிஞ்சிற்று
சாதனைக்காளல்லவே
சந்ததமுயெந்தனுடசிந்தைதனில்நின்றகுரு
சங்கராஉனதுதுணையே (13)

Koviloor Digital Library

அறிவிலோஅறிவுனு ளமர்ந்தமூலாதார
 ஆக்ஞைபிர்மந்தன்னிலோ
அங்கென்று வங்கென்று சிங்கென் றமர்ந்துதச
 மாடிடுஞ்சூட்சமதிலோ
நெறியிலோபதியிலும் பொறியிலோகதிரொளிவு
 நிற்குமண்டபமதனிலோ
நீக்கிலோபோக்கிலோமூக்குமுனை தன்னிலோ
 நீரிலோநீர்ச்சுளியிலோ
குறியிலோஅன்பர்கள் குணத்திலோவேதமுறை
 கூறிடும்ஞாயமதிலோ
கொஞ்சமும்வெளிப்படைகள் யாகவில்லையேயுனது
 குறியினைக்கண்டுசெல்வ
தரியாமல்வாடித் தயங்குறேன்குறியிது
 தானென்றுகாட்டவருளாய்
சந்ததமும்யெந்தனுட சிந்தைதனில்நின்றகுரு
 சங்கராஉனதுதுணையே (14)

அண்ணலேஉனதருள் நண்ணியமெஞ்ஞானரை
 அஞ்ஞானமூடரென்றும்
அருளிலாமூர்க்கரைத் தெருளுடையோரென்றும்
 ஆகமபுராணநிலையை
யெண்ணித்தெளிந்தநல் லறிவாளர்தம்மையே
 யேதுமரியார்களென்றும்
இன்சொலும்வாராத விகடக்கவிஞரை
 இகபரசாதகனெனும்
திண்ணமாய்நாமிருப் போமென்றுயெண்ணுகிற
 செயலெலாமுனதுசெயலெ
சீ.சீ.சீ.யிவ்வுலக ஆசைவேண்டாமென்று
 சென்றிடாவரைதாமரைத்
தண்ணீர்கள்போலயென் னுளமதுதளம்புகிற
 தன்மைநீயரியாததோ
சந்ததமும்யெந்தனுட சிந்தைதனில்நின்றகுரு
 சங்கராஉனதுதுணையே (15)

Koviloor Digital Library

யேதுதொழில்கற்றும் படித்துமேயெந்தனுக்
கேதேனுமாதரவிலே
யெங்கணுவியாபித் திருகின்றபிர்மமே
யேளையான்செய்ததெல்லாங்
கோதுநினையாமலே கிருபைகூர்ந்தருளுமென்
குறிகொண்டகருணைவடிவே
கொஞ்சுமொழிமடவார்கள் பாசத்தைவிட்டுனைக்
கூடிடுவதெக்காலமோ
போதுமென்றெண்ணுத கொடியபாசத்தினிற்
புகுவனேசுழியைநாடி
பூரணகும்பக ரேசகமெனுஞ்சூட்ச
புனிதத்தையானறியவோர்
சாதனைகளாயினும் யெந்தனுக்கருளுவாய்
சகலமும்நிறைந்தபொருளே
சந்ததமுமெந்தனுட சிந்தைதனில்நின்றகுரு
சங்கராஉனதுதுணையே (16)

அய்யனேயென்செய்வே னையனேகிருபைசெய்
யையனே அப்பனேயெனும்
ஆனந்தமாகவிற் மானந்தனே அடீ
மானந்தாவென் றுநிதமும்
பொய்யனுப்கற்றினே னல்லாதுமெய்யான
பொருளொன்றும் அறியவிலேயே
பூரணந்தனில்நின்று பேரறிவுபெற்றவர்கள்
புந்தியிலமர்ந்தகுருவே
துய்யனே அய்யமர யெவ்வுயிரிடத்திலும்
ஸ்தூலமுதலானபவனே
தொல்லுலகிலெந்தனைப் போலொற்றபாவிகள்
சொல்வதற்காருமிலேயே
சையோகம்மாயிருந் திடுவதற்குந்தனருள்
தந்திடுவதெக்காலமோ
சந்ததமும்யெந்தனுட சித்தைதனில்நின்றகுரு
சங்கராஉனதுதுணையே (17)

Koviloor Digital Library

கூறுதெரியாதசில மானிடர்களுரலையும்
கூடிடாமன துவலையே
கோதுவருமென் றடிக் கடியென து அறிவிற்
குறித்துநிலைநிற்கவிலையே
பேராசைகொண்டியான் வாடியேபொய்வேட
பேயர்களிடம்தேடியே
பிரமித்துமாகொடிய கர்மத்திலாழ்ந்தியே
பித்தனுபானதெல்லாம்
தேராதுயென் றுயர மாராதுவென் றதுன்
திருவுளமறிந்திடாதோ
தேகமதுபொய்யதே ஆகுமெனதென துளந்
திடமாகஓர்வழியையுஞ்
சாராததன்மையேன் வாராதகருணையேன்
தருகயிது சமயமையா
சந்ததமும்யெந்தனுட சிந்தைதனில்நின் றகுரு
சங்கராஉன துதுணையே (18)

தெரிந்தபலநூல்களைக்கற்றுமென்னுணுவச்
செய்கையுமொடுங்கவிலையே
தேடரியதர்மவிஷயங்களுக்கன்புடன்
செய்திரேன்கொஞ்சமேனும்
வெறியனைப்போலவுங்கத்திப்பிதற்றினேன்
மெய்நிலைதெரிந்திடாமல்
வீண்பூசைமந்திரங்கொடியவிரதங்களை
விண்டிலேன்கனவிலேனும்
அறிவிலாநிர்மூடனெந்தனைப்போலயிவ்
வகிலத்தில்வேறுமுண்டோ
ஆனலுனன்கொடியபாதகன்பாதகன்
அய்யனேஉன துவழியிற்
சரியென்றிரங்கியேவேறுவழிசெல்லாத
சாதுக்கள்நிலையருளுவாய்
சந்ததமும்யெந்தனுடசிந்தைதனில்நின் றகுரு
சங்கராஉன துதுணையே (19)

Koviloor Digital Library

இன்னவிதமென்றுதெரி யாதசிறுபையனுடை
யெண்ணம்தெரிந்துநீயும்
இரங்கியோர்வழியாயி னுஞ்செய்திடாவிடில்
யெவ்விதம்அரியவல்லேன்
சொன்னபடிகேட்கின்ற பேதையான்வேறுசெய்
தோன்றல்நீயரியாததோ
சோர்வுற்றதின்னமும் போராதுவென்றுநீ
சொல்லிடில்யெனதுசெயலால்
யென்னமாயான்கடத் தேறுவேனென்றுளம்
யேங்குவதை யென்சொல்லுவேன்
யெல்லாமும்நீசெய்வ தல்லாதுமற்றொன்றை
யெண்ணவோபுகழுமிலையே
தன்னாலுமெண்ணினேன் அரியாமைசெய்தபிளை
தான்பொருத்தெனையாளுவாய்
சந்ததமும்யெந்தனுட சிந்தைதனில்நின்றகுரு
சங்கராஉனதுதுணையே (20)

ஆடலாய்பாடலா யருவுமாயுருவுமாய்
அழியாதபொருளுமாகி
அச்சமாய்வச்சிரமா யெச்சமயவோர்களுக்
கானந்தமானபரமாய்
தேடலாய்த்தேடியுங் காணாதநிலையுமாய்ச்
சென்றவிடமெங்குமாகி
திக்குத்திகாந்தமு மிக்கவதிரூபமாய்ச்
செய்கின்றதொழிலுமாகி
மூடலாய்வெளியுமாய்மூர்த்தியாய்முப்பத்து
முக்கோடிதேவர்முதலாய்
மூச்சுமாய்ப்பேச்சுமாய் ஆச்சியாய்முக்கோண
மத்தியிலெழுந்தவொளியைச்
சாடலாய்நின்றவர்கள்தன்பெருமைசொல்லவுஞ்
சந்தேகம்வேறுமுண்டோ
சந்ததமும்யெந்தனுட சிந்தைதனில்நின்றகுரு
சங்கராஉனதுதுணையே (21)

Koviloor Digital Library

இன்னமென் வினைப்பயன் யென்செய்குமோவென்று
யேங்கிமனமிகவுழன்று
யேமாரலென்சொல்வேன் பாமரர்கள்போலவு
மிருப்பனேசற்றுகிலும்
சின்னமடையாமலென் மனதுஆனந்தஞ்
செழிக்கவும்முன தருளினற்
செம்பவளவாய்திரந் தின்பங்கொடுத்திடுஞ்
செல்வந்தனைக்கருதிநீ
யென்னபடிசொல்லினுங் கேட்பவன்கேளா
திருந்திடச்செய்தல்நீயே
யேதுசெய்தாலும்நீ செய்யலாம்பாவிமே
லேனேஉன்மனதுவலேயே
அன்னையும்அப்பனும் யாவரும்நீயென்று
அண்டினவன்யேளையையோ
அண்டமுதல்பிண்டம்வறை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (22)

தினையளவுவாராத செல்வமதையெண்ணியே
திரிகின்றபேதைமனதைச்
சிதராதடித்துத்திருப்பினுனையுஞ்
செலுத்துபவராருமுண்டோ
வினையினிலகப்படும் பித்தன்யானல்லவோ
விளைகின்றகாலம்விட்டு
வீண்பாடுபடுவனே மேன்பாடுபெருவனே
விழலுக்கிறைத்திடுவனே
துணையிலாஒருவனு னேனுசெயலாமுனது
சோதனைகளேதாகுமோ
துன்பவினைமீறுதே அன்பர்வழிகோருதே
சோருதேயெனதுமேனி
அனுதினமுஉனையெனது மனதில்வைத்திடுவதும்
அரியாதகிருபையேனே
அண்டமுதல்பிண்டம்வரைகண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (23)

Koviloor Digital Library

வடியவுங்கண்ணீர்கள் படியவும்புத்தியை
வருத்தவு மீறிமீறி
வாட்டுதேயெந்தனுடல் கோட்டிபலசெய்கின்ற
வல்லமைக்கேதாகிலுந்
தடியினுற்செல்லுமோ செல்லாதுஉனதுநிலை
சரசவழியாகவந்தால்
சாராதுஓர்நினைவு மாராதுகருணைவழி
தாழ்வுவாராதுமெய்யே
பொடியாகினும்விடச் சகியாதயென்னுடல்
புழுக்கோபெதுக்சோஇறை
போகுமோஉனையும்விட் டேகுமோயெனதுயிர்
பொருப்புக்குநீயல்லவோ
அடியின்முடிஅறியவென் றயனேடுகண்ணனும்
அரியாதசோதிமயமே
அண்டமுதல்பிண்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (24)

ஓயவிலையென்கவலை ஞாயமிலையோகருணை
உருகவிலையோஉன்மனம்
ஊழ்வினைகளில்லையே பாழ்மனதைவீணு
யுருக்குவதுஞாயமாமா
வாயுமிலையோசொல்ல மனமும்வலையோகொடிய
வர்மயென்மீதிலேனே
மாளாதோயெந்தனுடல் கேளாதோகூவுமுறை
வாதுக்கள்நீங்கிடாதோ
காயாதமரமதிற் கல்லேறுபட்டிடுங்
காரணம்போலாயினேன்
கருமவினைகுடிகொண்ட பாதகனுயினுங்
கருதினதுபொய்யாகுமோ
ஆயனிலையோயெனக் காருமிலையோயிந்த
அகிலத்தில்வந்ததேனே
அண்டமுதல்பிண்டம்வரைகண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (25)

Koviloor Digital Library

பார்க்கவும்பென்மனங் கோற்சுகவும்தேகம்
பதைக்கவும்பூதமாறிப்
பற்றவும்பேதைமதி சுற்றவும்மாயயிருள்
பம்பரம்போலாடவும்
பேர்க்கவேபென்னறிவை நீயறிவையையனே
யிப்பலவிதக்குறிகளை
யெதிர்கொண்டுதள்ளவுங் கதிர்கண்டுசெல்லவும்
இன்பரசமேலூரவும்
வார்க்கவுங்கருவினிற் பாயவும்ஆனந்த
மயமாகிநின்றுருகவும்
மங்காமலோங்கிநின் ருதாரமுடிவான
மரபையான்சொல்லவெளிதோ
ஆர்க்குமறியாதவிர ணவசுரூபமேயென்னு
ளாய்ந்திடும்போதருருவே
அண்டமுதல்பிண்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (26)

யெந்தனைப்போலவே உந்தனைவருந்துதற்
கெண்ணரியபேர்கள்கோடி
யிதுதவிரமதுவுண்டு தொழுகின்றமுதியோர்கள்
யிடைவிடாதன்பர்கோடி
கந்தமலர்தூவிநின் றானந்தமழைமாரி
கண்கொண்டுநிற்பர்கோடி
காலூன்றிநின்றவிட மெல்லாமுமுன்வரை
கடக்கவும் ஞாயமிலையே
சொந்தமாயெந்தனுக் கொருவனியல்லாது
துணைவருவரொருவரிலையே
தொடராமலாசைவினை படராதஅடைவையுஞ்
சொல்லாமல்யான்வருகவே
அந்தகன்பார்வையைப் போலவேயாகினேன்
அப்பனேயேழையையா
அண்டமுதல்பிண்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியான்பரமே (27)

Koviloor Digital Library

5296
R65

படாதவர்களறிவரோ அறியார்கள்யேளேபுண்
பட்டவன்வாய்குளறியே
பக்ஷமில்லாதெனது இச்சைபோற்கூறிய
பழிச்சொல்லும் யேதாகுமோ
கொடாதவரைவாங்குபவர் கூசாமல்நோகுவற்
குறிதெரிவர்னேகார்களே
கொஞ்சமதியுள்ளவன் பஞ்சையான்செய்திடுங்
குற்றமுங் குற்றமாமோ
திடமாகயென்மனது ஆகாதவரையினிற்
றேருவேன் தேருவேனே
தேடரியமுடியாத செல்வமேயிப்படிச்
செய்யவுந் தகுதியானே
அடமாகஓர்வழிகள் செய்யவென்றெண்ணிலேன்
அய்யனேமெய் யில்லையோ
அண்டமுதல்பிண்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (28

பெருஞ்செல்வமன்னரும் ஒருவர்கிகரிலையெனப்
பிரபந்த சம்பன்னரும்
பேசாதுபேசியே கூசாமல்வாதஞ்செய்
பித்தருங் கற்பமுண்ட
குரும்பருங் கோடானுகோடிமறைஓதிய
குருக்களுங் காலம்வந்தாற்
கூடுவிட்டழிபவர்க ளல்லாதுயின்னிலக்
கூத்துக் குபாயமிலையே
துரும்புக்கும்ஆழியில் ஓர்நிலைமையில்லாத
துன்பமென் துன்பமாமே
சுகமாய்ப்புசிப்பதும் துயில்வதுமன்றியில்
சுத்தநிலை யடையவிலையே
அருமறைகள்முறையிடுங் கிருபைவாரிதியேயென்
னுதாரமானபொருளே
அண்டமுதல்பிண்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (29

Koviloor Digital Library

ஒன்றுகிலும்நிலைமை யாகவிலையேகுறிக
ளொன்றின்மேலொன்றுவருதே
உழுதுபயிரிட்டவன் பயனடைவதுண்டுஓர்
கூளமும் இல்லாவிடில்
கன்றதனைவிட்டபசு நின்றலருவதுபோல
கதருவதும்வகையல்லவோ
காறியம்பெருவர்கள் வீரியம்பேசார்கள்
கருவாளியவரல்லவோ
கொன்றுதின்னுமையொரு நோன்புவந்துற்றிடிற்
குறிவருவதரிதல்லவே
கோளைமதியுள்ளவன் னுனுமேயுந்தன்
குணப்படிநடக்கலாகா
தன்றுமுதலின்றுஉன் தொண்டுசெகின்றவன்
அடியவர்க்கெளியபொருளே
அண்டமுதல்பின்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (30)

பண்டுலகில்வாழ்கின்ற மானிடம்தன்னிலெ
பரமாத்மமொன்றுமறியாப்
பாவினுனுந்தனை மேவியேகூவினேன்
பரமனேஉனதுபக்ஷம்
கண்டுஞன்தேரவே வழியொன்றுமரியாத
கபவனுனனபோதும்
கால்நிமிஷமாயினு மரவாமலெந்தன்
கருத்தினிலமர்ந்தகுருவே
தொண்டுசெய்பன்பருக் குன்னருள்புரிந்திடுஞ்
சுத்தனேநித்தனேஉன்
துய்யமலர்தாழிணைப் போற்றினேன்போற்றினோர்
துன்பத்திலாழ்ந்தமுறையோ
அண்டிலையிளந்தபே டாமினேனுனதடிமை
அய்யனேகிருபைசெய்வாய்
அண்டமுதல்பிண்டம்வரை கண்டபலபொருளினி
லமர்ந்துவெளியானபரமே (31)

Koviloor Digital Library

லாவணி வர்ண மெட்டு

கணபதியைநாடு மனமே
கெதிபெற வழிதேடு (க)

சணநேரமாகிலும் உலகவாழ்க்கையைச்
சதமென்று நம்பிநீ பதங்கெடாதேசொன்னேன (க)

தேடும்பொருள்களுந்தன் கூடுபோம்பொழுது
ஓடும்பாபபுண்யம் நாடுமதற்குள்ளாக (க)

மாதர்வழியிலுந்தன் பேதைமடநெஞ்சத்தைச்
சாதனைசெய்யவிடாதே சொன்னேநம். (க)

கெட்டிமச்சுவீடு கட்டியதிலிருந்து
நஸ்ட்டிக்காளாகாமற்கெட்டிக் கிதுவேசொன்னேன் (க)

மாஜமக்கள்மன பீதிலுந்தன்மனம்
வாதுசெய்திடாமல் ஓது அனுதினமும் (க)

நாறுமுடலைநண்ணி நாடியதென்றெண்ணி
தாருக்கூருங்கெட்டுமாறுபடுமுன்னமே (க)

சாணுவயறைநம்பி வீணிலலைந்துவெம்பி
தோணிகவிழ்ந்திடுமுன்பேணிப்பிழைப்பதற்கு (க)

யிந்தவாழ்வுதனில் வந்தபெருமையெனில்
விந்தையாகுநம்மள் தொந்தவினைகளை (க)

மட்டியுறவுதனை விட்டுஞாயமதை
ஒட்டுபரமபதம் எட்டுவதற்குநம் (க)

ஓடிஅலைந்துமிகவாடிக்கதைகள்தனைப்
பாடித்திரிந்திடாமல் நாடியிருப்பதற்கு (க)

வாச்சதரிதுஜன்மம் போச்சென்றெல்லவர்க்கும்
யேச்சுவைத்திடாமல் மூச்சுப்போயிடுமுன (க)

யெல்லாமழியுமென்ற சொல்லைமெய்யென்றெண்ணி
பொல்லாரென்றிமுன் நல்லோரென்பதற்கு (க)

பெண்டுபிள்ளைதனைக் கண்டுமகிழ்ந்திடாதே
பண்டுவினைகளுயிர் விண்டுபோயிடுமுன் (க)

கோவிலூர் ஆதீனம் ... 630 307

நாற்றச்சரீரமதைப் போற்றிவளர்த்துவரும்
கூற்றுக்கழித்திடுமுன் மாற்றிப்பிறப்பதற்கு (க)

செய்யும்பூசைஜடம் உய்யும்போதுபல
னெய்திடாதுநம் மெய்யுங்கெதிடைய (க)

மோசக்காரமாத ராசைசொல்லிநம்மை
நாசஞ்செய்திடுவர் பேசவாயுமில்லை (க)

யேருஞ்சுழிமுனையில் மாறும்வாசிதனைப்
பாரும்யிடைபின்கலை சேரும்வகைதெரிய (க)

கண்டபலனைவினா லுண்டோயேதாகிலும்
அண்டமதனில்வந்த பிண்டம்வகைதெரிய (க)

யென்றுமிந்தவாழ்வு குன்றாதிருக்குமென
நன்றாயரிந்துபாரு ஒன்றைத்தெரிந்துசேரு (க)

நேயம்வைத்துயிந்த மாயக்காரிகளாற்
காயங்கெட்டதையோ சாயம்வெழுத்திடுமுன் (க)

கள்ளமன்றிமன துள்ளம்நைந்துருகு
வள்ளலிடத்தைநாடிக் கொள்ளவேணுமென்றால் (க)

பண்டுசெய்தவினை விண்டுபோகவழி
கண்டுநல்லறிவு கொண்டுநோக்கிடவும் (க)

தர்மநெறியில்லாத கர்மலோபியர்கள்
பிர்மகுலமென்றிடும் வர்மச்சொல்லைவிட்டு (க)

நாதம்நின்றகுரு சூதுதெரிந்திடாமல்
வாதியாகிவந்து சாதிபேதமென்பர் (க)

யிறந்ததேகமது பிறந்துவருமென்பதை
திறந்துபார்த்திடலாம் வருந்திஅனுதினமும் (க)

புத்திகெட்டுமனஞ் சுத்திதிரியுமதை
யெத்திவிடுவதற்கு பக்திதவறாமலே (க)

வெப்பமாங்கொடிய முப்பாழ்கடந்தவற்கு
அப்பால்வருமகிமை செப்பயென்தெரியும் (க)

மேவிமேவியிந்தப் பாவிமாய்கையுன
தாவிபோக்கிடுமுன் கூவிக்கூவிநம் (க)

Koviloor Digital Library

தேரித்தெளிந்துமன தாரிப்பழுவினையில்
மீறிக்கடுஞ்சினத்தைக் கூறித்திரிந்திடாமல் (க)

நொடியில்மாருமதி யடியில்னுளேந்துவாசிப்
படியிலேரவைத்து முடிவுகண்டிடவுங் (க)

காலம்பார்த்துலகிற் சாலஞ்செய்துவெருங்
கோலங்கொள்ளாமலே பாலங்காணும்படி (க)

உருகிஉருகிமனஞ் சருகிசருகியுடல்
குருகிப்போயிடுமுன் மருகியிருப்பதற்கு (க)

வாட்டுமிருளதற்கு மாட்டுஞாயமதை
காட்டும்வெளியதனில் மூட்டிடும்பரமசுகம் (க)

ஐவர்நிலையறியார் சைவரென்பர்மிக
நைவர்குறிசொல்வரை வைவரவரைவிட்டு (க)

வலித்துஉனதுமனஞ் சலித்துஆடினதில்
கெலித்ததேதயிது பலித்தபாதைசொன்னேன் (க)

கோளுங்குண்டணியுஞ் சூழும்புலையரையெண்
ணுழுஞ்சேராமலே கேளும்ஞாயமதை (க)

ஆற்குந்தெரியுமோவிப் பாற்குள்ஞாயமது
சேற்குங்கரையதனிற் கோற்கும்பரம்பதம் (க)

இணக்கஞ்சற்றுமில்லாப் பிணக்குநேர்ந்தாலும்
சுணக்கிடாதேகுரு வணக்கம்வேணுமென்றால் (க)

இறப்பதல்லாதினிப் பிறப்பதில்லையென்று
மறப்பதரிதுமாய்கை திரப்பதற்குநம் (க)

சீருஞ்செல்வமுமிவ் வூருஞ்சாதனமோ
பாரும்பிர்மமதைச் சேரும்அடைவுகண்டு (க)

மண்ணில்வந்தவுயிர் விண்ணிலொழிவதில்லை
கண்ணிற்தோற்றுது யெண்ணிப்பார்க்கவரும் (க)

யெந்தவினைகளுமுன் தந்தைமதிகளென்று
முந்தச்சொன்னசொல்லை சொந்தமாகயெண்ணி (க)

சங்குசுட்டாலு மங்கிடாதுநிரம்
அங்கமழிந்திடுமுன் தங்கமாவதற்கு (க)

Koviloor Digital Library

செப்புமொழியதனு லொப்புமோமனது
துப்புத்தெரிந்துகொண்டால் முப்புப்பார்த்திடலாம் (க)

பற்றுமனதரீந்துசுற்றுங்கருமவினை
யெத்தினுல்த்தெரியும் சற்றுநில்லைநிருத்தி (க)

யெல்லாந்தெரிந்தவரைச் சொல்லாலறியவருங்
கல்லாருனுலும் நல்லோர்பெரிதென்றெண்ணி (க)

கற்றுமனந்தமத முற்றுவாழ்வுதனை
அற்றுவிடாதவற்கு சசற்றுமில்லைதவம் (க)

யேதுயினிமேலிந்தச் சூதுபுரிவதெல்லாம்
வாது அனுதினமுங் கோதுவருமென்றெண்ணி (க)

யெல்லாம்தெரிந்தோமென்ற வல்லாண்மைபேசிநிதம்
பொல்லாங்கெடுத்ததேகம் நில்லாதுருதியென்று (க)

வேதாகமத்திலுள்ள ஆதாரமெல்லாம்நம்மள்
பேதைமனதாற்கெட் டுவாதைப்பட்டதுபோதும் (க)

Koviloor Digital Library

உ
குருவே துணை.

பேரின்ப சாகரக்

கலிப்பா.

வேதங்கடந்தமெய்ப் பொருளே
போதங்கடந்த பூரணமே
நாதங்கடந்த நடுநிலையே
பாதம்பணியப் பகராயோ 1

பணிந்தெண்ணும் பழிச்சொல்லை
அணிந்தேனுனது அன்புகொண்டு
துணிந்தென்முன்னே வருந்துன்பம்
தணிந்தாளுவதற் கருள்தாராய் 2

அருவேஅணுவேஅகண்டவெளிக்
கருவேயென்னுள் கலந்துநின்ற
உருவேயென்னோ டுடன்பிறந்த
தருவேநிகருந் தற்பரமே 3

தக்கோர்புகழுந் தனிமுதலே
பொற்கோபுரமே பொன்னொளியே
புக்கார்நேசம் விட்டகல
கற்கேன்கற்றுங் காரணமே 4

கற்றுங்களங்கமறியாமல்
பெற்றும்பொராத பேதையெனே
உற்றும்முரவும் முரவாகா
சுற்றும்வினையிற் சுழல்வேனே 5

சுழல்வேனேயான் சுருதிதனில்
அழவோயின்னம் அழுதழுது
களவோநாயேன் கருத்துனக்கு
உளவோதெரியா ஊமைகண்டாய் 6

Koviloor Digital Library

கண்டேனுலகக் காட்சியெல்லாம்
உண்டேனென துள்ளண்புருக
விண்டேனுனது வெளிமாய்கை
பண்டேநான்செய் பயனரியேன் 7

பயனொன்றிலாத பாவியெனை
அயனும்படைக்க அதீதமுண்டோ
சுயமாய்முளைத்த பரஞ்சுடரே
செயலுன்றுணையென் செயல்வேறே 8

வேராய்ப்பிரித்து விடுவதற்கு
பூராயுனக்கு மனம்வருமோ
சேராதவனைச் சேர்த்துவிட்டால்
வாராதெல்லாம் வருமுனக்கே 9

வருவதற்குயிர் மலைத்தபிரான்
உருவெடுத்துவிட் டொப்புவரோ
குருவடுத்துநின் குறிதெரிந்து
பெருவதற்கினிப் பேசுவனோ 10

பேசிப்பேசிப் பிலன்குறைந்தும்
வேசிக்குணம்விட் டகலாமல்
நேசித்திருந்து நேர்மைகண்டும்
காசிப்புதுமை காண்கிலனே 11

காணுங்கற்ப மிதுவென்று
ஊணும்படியெனக் கூட்டிவிட்டு
வீணிலலைந்து வெருண்டுருண்டு
நாணும்படிக்கி நாயானேன் 12

நாயானலோர் நலமுண்டு
பேயாயெனையும் பிதற்றிவைத்தாய்
வாயேவலித்து வருந்துவனோ
காயேதின்னயென் காலமிதோ 13

Koviloor Digital Library

காலம்பார்த்துக் கனியுமென்று
கோலமழிந்து குறிமாறி
பாலைப்பருவமும் பாழானேன்
சூலைத்தரித்துஞ் சூதேனே 14

சூதாயிருக்குஞ் சுருக்கவிழ்ந்தால்
மாதாவாலே மறைப்பதுண்டோ
வேதாஉந்தன் வெளிச்சமெல்லாம்
நாதாயெனக்கு நாட்டலையோ (15)

நாட்டம்பிடித்து நானானேன்
ஓட்டையெடுத்தென் ஓடுமிலேன்
காட்டைக்கலைக்கக் கருதினவன்
வேட்டைபுரிய வெளி[illegible] (16)

வெளியாயிருந்த வெளிச்சமெல்லாம்
யெளிதாதுரை [illegible]தவற்கு
சுளிநேர்தெரிந்து [illegible]ருண்டிர்ந்தால்
கழிகூர்ந்திருக்கக் [illegible]டோமே (17)

ஆதீனம்

கண்டுங்காணு திசெயங்கள்
உண்டுமுண் டென்றுரவாடி
கொண்டுதிரியென் குணக்கேடால்
நண்டுஅளந்தபடி நானே (18)

நானுய்நீயாய் நானவனுய்
சேனுபதியாய்ச் செயலுற்றுய்
யேனேயிந்த விதமெல்லாம்
ஆனுய்நானும் அலைவதற்கோ (19)

அலைவாய்த்துரும்பா யனல்மெழுகாய்
வலையால்ப்பட்டுழல் மான்போலும்
சிலையால்வகுத்த ஜடலமினிக்
கொலைபோனலென் குறைவிடுமோ (20)

Koviloor Digital Library

கொறைவுங்கூட வுனக்கில்லை
மறையுஞ் சொலவும்வாயுண்டோ
அறைவேன்கறைவே னனுதினமும்
நிறைவோ நினைப்பும் நில்லாதே (21)

நில்லாவாழ்வை நிலையென்றென்
பொல்லாமனது பொருந்தாமற்
சொல்லாற்சுட்டிய சொற்கேட்டும்
மெல்லாஞ்சரியென் றிருப்பேனே (22)

இருப்போமென்று மிருந்தாலும்
மருப்பேய்வந்து மயக்குறதே
கருப்பையுளே நீ கலந்தமுதல்
ஒருப்போதாயினு முனைமறவேன் (23)

மறவேனென்றதும் நீசாட்சி
மறந்துயிருப்பதும் நீசாட்சி
இறவேனென்பதும் நீசாட்சி
இறந்துபிறப்பதும் நீசாட்சி (24)

நீவேறானல் நீயுமிலை
நான்வேறானல் நானுமிலை
ஊன்வேறானல்உடலுமிலை
தின்வேறானற் செகமுமிலை (25)

முற்றிற்று.

Koviloor Digital Library

இராகம் - சௌராஷ்ட்ரம் - தாளம் - ஆதி.

பல்லவி.

எப்படிவிட்டிடுவானோ யின்னம்
எப்படிவிட்டிடுவானோ (எ)

அநுபல்லவி.

யெப்படிவிட்டிடுவானோ யிப்படிவிட்டிடுவானோ
தப்பிதங்களின்னதென்று செப்பிடாமலெந்தனையும் (எ)

சரணங்கள்.

வஞ்சியர்மேல்மயக்கத்தை விடுத்திடச்செய்வானோ
மகத்தானபொருள்தனை கொடுத்திடச்செய்வானோ (எ)
கொஞ்சமதிதந்துயென்னைக் கெடுத்திடச்செய்வானோ
குறிதெரிந்துஅவனை அடுத்திடச்செய்வானோ (எ)
கஞ்சிகஞ்சியென்றுயெங்கும் அலைந்திடச்செய்வானோ
காசாசைகொண்டுயின்னங் குலைந்திடச்செய்வானோ (எ)
தஞ்சமென்றஅடியேனைக் கலந்திடச்செய்வானோ
சர்வநாசமும்போகதுலைந்திடச் செய்வானோ (எ)
பண்டுசெய்வினைகள்விண்டிடச் செய்வானோ
பாற்குள்யெனைமிரட்டித்துண்டிடச் செய்வானோ (எ)
தெண்டனென்றவனையுள்கொண்டிடச் செய்வானோ
தேரித்தெளிந்தபடி கண்டிடச்செய்வானோ (எ)

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஆதி.

பல்லவி

யென்னைப்படைத்தாயே. யெனக்
கிப்படிவிட்டாயே

அநுபல்லவி

உன்னைக்செதியென்றுநம்பினதற்கு முன்னம்
விதித்த விதியைநினைக்கவென் றென்னை

Koviloor Digital Library

சர்ணங்கள்

பாரிலவதரித்து கெட்டகாறியர்க்காளாகி
தூரியினிற்படும் மீன்போலவேயெந்தன்
காரியமான அறிவுகலங்கிட (யென்னை)

யெத்தனைனுள்செல்லுமோ மனப்பித்தந்தெளிவதற்கு
உத்தமடமைக்கிப்பற்றாதோசெய்வினை
கற்றஅரிவுகள் தத்திக்குதித்திட (யென்னை)

பூரணங்கண்டவர்க்கு வீணருடகாரணமேதுகையே
தாரணிதன்னிலே கோரணிசெய்வதை
வாரணிர்துவிட்டுப்பேரணிபூணுமல் (யென்னை)

இராகம் - ஆரபி - தாளம் - ஆதி.

பல்லவி

யெந்தனிருதயம் தன்னிலிருந்து
விளையாடும்குஸ்திரமே

அநுபல்லவி

உந்தனைநம்பின தர்க்குயெனக்கோ
ருபாயஞ்சொல்வா யென்றுகோரி
மனமீறி குறையாரி (யெந்தன்)

சரணம்

அண்டமதனிலோர் பிண்டம்நகரென்ற
சண்டாளஊரினில் பிறந்தேன் யெங்கும்
கண்டபடியெல்லாம் உண்டாக்கிவைத்தஉன்
காட்சியென்றுமனந் துறந்தேன் யான்
கொண்டவினையாற் குறிதெரியாமலே
கொஞ்சங்கொஞ்சமாகக் குறைந்தேன் கெட்ட
வண்டத்தனங்களை மறந்தேன் உந்தன்
தொண்டுசெய்யவென்றுபிறந்தேன் (யெந்தனி)

Koviloor Digital Library

கற்றதுங்கேட்டதுங் கைக்குதவாமலே
கானலைத்தேடிய மான்போல் யென
துற்றசனங்க ளூரவுதனைவிட்டு
உந்தனுசைகொண்டு தேன்போல் இன்னம்
வற்றாதசெல்வம்பெருக்கெடுத்ததோட மயங்கிக்
கண்களெல்லாம் வான்போல் யென்னை
குற்றஞ்சொன்னாற் கரைமீன்போல் உன்னைப்
பெற்றும்பயனுண்டோ நான்போல் (யெந்தன்)

ஆருமற்றபர தேசியைப்போல
அகிலத்திற் பேசஆனேனே உந்தன்
கூருதெரியாக் குடிமிகளெல்லோரும்
கூட்டங்கூடி மிகத்தானே யெல்லாந்
தேரிக்கொண்டோமென்ற ஆனுவந்தாலவர்
செய்வதற்கென் செய்குவேனே இந்தப்
பாரில்வீணிலிருந்தேனே உன்சொல்
வீரியங்கண்டிலேனுனே (யெந்தனி)

யென்னையுருவா யெடுத்துவளர்த்துயென்
றன்னைக்கெடுப்பாயென்றோடி மன
துன்னைத்தவிரக் கெதிவேறிருக்குதென்
றொப்பவில்லைஓர்வினடி பட்ட
சின்னங்களைச்சில நேரம்நினைந்து
தேமித்தேமிமுகம்வாடி நான்
இன்னதென்றறியாப்பேடி நீ
சொன்னபடிக்குக்கொண்டாடி (யெந்தனி)

இராகம் - தோடி - தாளம் - ஆதி.

பல்லவி

சத்தியத்தைநிலைநிருத்து நீயுஞ்
சத்தியத்தைநிலைநிருத்து

அநுபல்லவி

நித்யம்மனித்யமென்று பக்திதவரிடாமல்
முத்திபெருவதற்கு நத்திவாழ்வைமறந்து (சத்தி)

சரணம்

காலஞ்செய்யுங்கோலங்கள்மெத்த மாய்கையைவிட்டுப்
பாலங்காணுவதுமுன்பெற்ற தவத்தால்வந்தால்
ஞாலமடைவதற்குளொத்த நினைவுகள்முன்
சாலம்தெரிந்துவினைசுத்த பசிப்பதற்குப்

Koviloor Digital Library

பாலைக்குடித்துவிடுநித்தம் மரவாமலே
நூலைமனதிலுன்னிச்சித்தம் இரங்காமலே
கோலையூன்றிக்கொள்வதுபக்தம் பிடித்துக்கொண்டு

மேலைக்கோபுரஞ்சென்று மூலப்பொருளில்நின்று (சத்தி)
பட்டும்பலனுணடென்றுகெட்டு மடியுமின்ற
மட்டிமனக்குரங்கைச்சுட்டு தெரிவித்தாலும்
விட்டிடாமலாசையிலெலாட்டும் அதற்குவகை
சுட்டுச்சட்டென்றுவீரங்கட்டு கொதிப்பெடுத்துக்
கொட்டும்அறிவுனலேதட்டும் அரிந்தவின்பு
பெட்டியிருப்புயிந்தமட்டும் பிறந்திருந்தால்
கிட்டும்அ[illegible]ர்களுஞ்சொட்டும் இதைமரந்து
வெ[illegible]கஷ்ட்டிப்போகாமல்தம்பி (சத்தி)

பேது[illegible]கிடையாதென[illegible]பாது மனக்கவலை
வாதாய்த்திரிந்திடாமலோது உனக்குவருங்
சோதா[illegible]ங்கள்மீது குருபரனுஞ்
சூதா[illegible]க்கிரான்முந்நாதா தீர்த்தமாடியுஞ்
சேதுப[illegible]லாகாது அஞ்ஞானங்கண்டாற்
காதுகே[illegible]து செய்துகொள்வதில்
சாதிமுறையு[illegible]து மல்ப்பொருதியே
மோதித்தெளிந்தவர்க்குச்சோதிவிளையாடிடும் (சத்தி).

கோவிலூர் ஆதீனம் ... 630 307

இராகம் - சௌராஷ்ட்ரம் - தாளம் - ரூபகம்.

பல்லவி

மனமேநீசெய்யும் வகையொன்றுமில்லையே

அநுபல்லவி

முன்னமேவிதித்தபடி முடியுமல்லால்வேரில்லை (ம)

சரணம்

யென்னவந்தாலுமதற் கென்செயலாம்சொல்லு
புன்னகைசெய்தீசன் பொற்பதம்தனில்நில்லு (மன)
ஆவியுள்ளமட்டும் அலைவதென்றந்தன்விதி
மேவியிருந்தாலும் பாவிசெகதீசன்கெதி (மன)
தினமுமரவாதே தேரிப்பரவாதே
மனமுங்கரையாதே வகுத்ததுகுரையாதே (மன)

Koviloor Digital Library

5296
R65

Koviloor Digital Library